மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆண்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண்களையும் சேர்த்துக்கொள்வதுபற்றி பல்கலைக் கழகம்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. பெண்களுக்கு என்று தனியாக சென்னையில் நான்கு கல்லூரிகளும் மற்ற இடங்களில் மூன்றும் இருக்கின்றன. இவர்களுக்குத் தனியாக சில வசதிகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது— Retiring room for women students, separate hostel and playground, appointment of a few women teachers on the staff of the college concerned and provision of a direct teaching in high schools, etc. அந்த அடிப்படையில் ஆண்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கான வகுப்புக்களைத் துவக்குவதற்கு வாய்ப்பு இல்லை.

கான்சாகிப் வாய்க்கால்மீது பாலம்

* 242 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகாவில், சிதம்பரம்-கிள்ளை சாலையில் நவரப்பேட்டை என்ற இடத்தில் கான் சாகிப் வாய்க்கால் மீது கட்டப்பட்டிருக்கும் மதகு பஸ் போக்குவரத்துக்கு ரொம்பவும் இடைஞ்சலாக இருப்பதால் அதை இடித்துவிட்டு பெரிய மதகாகக் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்விதமான செயற்குறிப்பு எதுவும் ஆய்வில் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்த மதகானது வண்டிகள், பஸ்கள் போவதற்கு மிகவும் வசதிக் குறைவாக இருப்பதனால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. சென்ற காலத்திலேயே இதுபற்றி ஆட்சியாளரிடத்தில் சொல்லப்பட்டது. உடனடியாக இந்த அரசானது அந்த மதகை எடுத்துவிட்டுப் பெரியதாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றி மாவட்ட வளர்ச்சி கௌன்சிலில் இருந்து பரிந்துரை எதுவும் இந்த அரசுக்கு வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்திற்கு வெள்ள நிவாரணம்

* 243 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு பெரும் மழையால் ஆறுகள் உடைப்பால் வெள்ளம் ஏற்பட்டதா ?